குருக்கம்

நிலம் – குத்தகை – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் தெற்கு வட்டம் – – குறிச்சி கிராமம் – புல எண்.1 இல் 0.90 ஏக்கர் வரிப் புறம்போக்கு நிலத்தினை பாலம் அமைத்து பயன்படுத்திக் கொள்வதற்காக, தி/ள். ஏ.சி.சி. நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது – குத்தகை நீட்டிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

13 NOV 2003

வருவாய் (நி.மு.2) துறை

அரசாணை (நிலை) எண். 434 நாள்: 5-11-2003

38474

படிக்க:-

சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் கடிதம் எண்.இ1/46000/98, நாள் 4.2.02.

ஆணை:

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை தெற்கு வட்டம், குறிச்சி கிராமத்தில், புல எண். 1 இல் உள்ள 'வரிப்புறம்போக்கு' என வகைப்படுத்தப்பட்டுள்ள 0.90 ஏக்கர் நிலத்தில் பாலம் அமைத்து பயன்படுத்திக்கொள்வதற்காக தி/ள். ஏ.சி.சி. நிறுவனத்திற்கு 24.10.86 முதல் 23.10.95 முடிய ஒன்பது ஆண்டுகளுக்கு மாவட்ட ஆட்சியரால் குத்தகைக்கு வழங்கப்பட்டது. குத்தகைத் தொகை முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைக் காலம் 23-10-95 உடன் முடிவடைந்துள்ளதால், திருவாளர்கள் ஏ.சி.சி.நிறுவனம் தனது 5.11.97 நாளிட்ட மனுவில், மேற்படி குத்தகையை 24.10.95 முதல் மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதன்பின்னர், 24.10.95 முதல் நிலுவுத்தகையை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். குத்தகை நீட்டிப்பு கோரும் மனுவில் மாற்றமோ, வேறு முக்கியச் சிக்கல்களோ ஏதுமில்லை என்று கூறியுள்ளார். குத்தகை காலத்திற்கு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்வது தொடர்பாக விற்பனைப்பிரிவு விவரங்கள் சேகரிக்கப்பட்டதில், பத்திர எண்.2537, நாள் 7.8.95 இன்படி ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,00,000/- என்று விற்பனை செய்யப்பட்டதை மதிப்பு நிர்ணயக் கொண்டு, 0.90 ஏக்கர் நிலத்திற்கு, நிர்ணயிப்பாக ரூ.90,000/- எனக் கணக்கிட்டு 24.10.95 முதல் 23.10.96 வரையிலுள்ள காலத்திற்கு ரூ. 88,200/- என்றும், 24.10.96 முதல் 23.10.97 வரையிலுள்ள காலத்திற்கு ரூ.98,784/- என்றும், 24.10.97 முதல் 30.6.98 வரையிலுள்ள காலத்திற்கு ரூ.75,777/- என்றும், 1.7.98 முதல் 23.10.98 வரையிலுள்ள காலத்திற்கு (115 நாட்களுக்கு) ரூ.4,979/- என்றும், குத்தகைத்

-2-

VerifiedRealEstate

தொகை நிர்ணயிக்கலாம் என்று மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

2. நிலநிர்வாக ஆணையர் தனது அறிக்கையில், மாவட்ட வருவாய் அலுவலரின் கணக்கீட்டின்படி 1996 முதல் 1998 வரையிலான 3 ஆண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஏக்கர் உயர்வு அளிப்பது சரியல்ல எனத் தெரிவித்து 25-10-95 முதல் 3-6-98 வரையிலான காலத்திற்கு நிலமதிப்பில் 14% குத்தகையாக ரூ.12,600/-ம், 4.6.98 முதல் 23.10.98 வரை நிலமதிப்பில் 2% (ரூ.1,800/-) குத்தகை, 2% தலவரி, மற்றும் 10% தலமேல்வரி எனக் கணக்கிட்டு குத்தகைத் தொகையை வருவித்துக்கொண்டு குத்தகை நீட்டிப்பு வழங்கலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையரின் செயற்குறிப்பு ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது. பிரஸ்தாப புலம் 'வாரி புறம்போக்கு' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி புலம் 9-2-61 முதல் 23-10-95 வரையிலுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சியரால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குத்தகை காலம் 23-10-95-இல் முடிவடைந்துள்ளதையடுத்து குத்தகையை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்துள்ளார். மாவட்டாட்சியரால் குத்தகை நீட்டிப்பு வழங்கப் பரிந்துரைக்கப்பட்ட காலம், ஏற்கனவே முடிவடைந்துவிட்டது இருப்பினும், குத்தகை நிலம் 24.10.95 முதல் தொடர்ந்து தி/ன். ஏ.சி.சி. நிறுவனத்தின் அனுபவத்திலிருந்தான் உள்ளது. மேலும் 24.10.95 முதல் 23.10.98 வரை உள்ள காலத்திற்கு உத்தேச குத்தகை தொகையாக ரூ.2,67,740/- நிறுவனத்திடமிருந்து வசூல் செய்து 25.9.2001 இல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலையில், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் நிலநிர்வாக ஆணையரின் பரிந்துரைகளை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், கோவை தெற்கு வட்டம், குறிச்சி கிராமம், புல எண்.1-இல் 0.90 ஏக்கர் 'வாரிப் புறம்போக்கு' நிலத்தினை தரம் அமைத்து பயன்படுத்திக்கொள்ள தி/ன். ஏ.சி.சி.நிறுவனத்திற்கு வருவாய் (நிலவரி) ஆணை எண்.24 ஏ-இன்கீழ் உள்ள வழக்கமான நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்கனவே குத்தகைக்கு வழங்கப்பட்ட குத்தகை காலம் 24-10-95 உடன் முடிவடைந்துள்ளபடியால், 24.10.95 முதல் 23-10-2004 வரை கீழ்க்கண்டவாறு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து குத்தகை நீட்டிப்பு வழங்கி அரசு இவண் ஆணையிடுகிறது.

(1) 24.10.95 முதல் 3.6.98 வரையிலான காலத்திற்கு நிலமதிப்புத் தொகையான ரூ.20,000/- இல் 14% ஆண்டுக் குத்தகையாகவும், அதற்குண்டான தலவரி மற்றும் தலமேல்வரி சேர்த்து வசூல் செய்யப்பட வேண்டும்;

(2) 4.6.98 முதல் 23.10.98 வரையிலான காலத்திற்கு மேற்படி நிலமதிப்புத் தொகையில் 2% குத்தகை, 2% தலவரி மற்றும் 10% தலமேல்வரி ஆக மொத்தம் 14% ஆண்டுக் குத்தகையாக வரையிக்க வேண்டும்;

(3) 24.10.98 முதல் 23.10.2001 வரையிலான காலத்திற்கு, 1998 ஆம் ஆண்டைய நிலமதிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.460, வருவாய்த்துறை, நாள் 4.6.98 இன்படி நிலமதிப்பில் 2% குத்தகை, 2% தலவரி மற்றும் 10% தலமேல்வரி ஆகமொத்தம் 14% ஆண்டுக் குத்தகையாக வரூல் செய்யப்பட வேண்டும்;

(4) 24.10.2001 முதல் 23.10.2004 வரையிலான காலத்திற்கு 2001 ஆம் ஆண்டு நிலமதிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.460, வருவாய்த்துறை, நாள் 4.6.98-இன்படி நிலமதிப்பில் 2% குத்தகை, 2% தலவரி மற்றும் 10% தலமேல்வரி ஆகமொத்தம் 14% ஆண்டுக் குத்தகையாக வரூல் செய்ய வேண்டும்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள ஆணைகளுக்கிணங்க குத்தகைக் ஒப்பந்தம் நிறைவேற்றி, குத்தகைத்தொகை வரூல் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன்விவரத்தை தெரிவிக்குமாறு கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. கந்தசாமிதேவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர், சென்னை-5,
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.
மேலாளர், அசோஷியட் சிமெண்டு கம்பெனி லிமிடெட், மதுக்கரை,
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்:-

நிதித்துறை, சென்னை-9
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[illegible] 7.11.2005
பிரிவு அலுவலர்.

Verified RealEstate™